# “தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகள் எல்லாவற்றையும்” (14:19-28)

*நானும் எனது குடும்பத்தாரும் ஆஸ்திரேலியாவில் ஊழியக்காரர்களாகப் பணி செய்து கொண்டிருந்தபோது, எங்களுடைய தனிப்பட்ட உதவியானது ஒரு பிராந்திய சபையிலிருந்து கிடைத்து வந்தது; ஆனால் அநேக பிராந்திய சபையார் பயண நிதி, ஊழியநிதி, கட்டிட நிதி போன்றவைகளைக் கொடுத்ததன் மூலம் எங்களுடன் ஐக்கியம் வைத்திருந்தார்கள். ஆகையால், நாங்கள் அமெரிக்க நாட்டிற்கு மறுபடியும் பயணம் சென்றபோது, இந்த சபைகளுக்குச் சென்று ஊழியத்தைப் பற்றிய அறிக்கை கொடுப்பதில் எனது நேரத்தின் பெரும்பகுதி செலவாயிற்று. இந்த அறிக்கைகளில் நான் எனக்குப் பிரியமான இரண்டு வசனப்பகுதிகளைப் பயன்படுத்தினேன். அவைகளில் ஒன்று பிலிப்பியர் 1:3-6 ஆகும். “சுவிசேஷம் உங்களுக்கு அறிவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரைக்கும் நீங்கள் அதற்கு உடன்பட்டவர்களானபடியால்[1] நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம் பண்ணி, உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.” பிலிப்பி பட்டணத்திலிருந்த சபையார் சுவிசேஷத்தை அறிவிப்பதில் தங்களின் தொடர்ந்து செய்யப்பட்ட நிதி உதவியால் பவுலுடன் “உடன்பட்டார்கள்” (பிலி. 4:15, 16). எங்களுக்கு உதவி செய்தவர்கள் உண்மைக் கருத்தில், எங்களுடன் இருந்து ஆஸ்திரேலியாவில் கிறிஸ்துவினிடத்தில்*

*ஆத்துமாக்களைக் கொண்டு வரும் ஊழியத்தில் ஈடுபட்டிருந்த தாக நான் வலியுறுத்தினேன்.*

*இந்த அறிக்கைகளில் நான் பயன்படுத்திய எனக்குப் பிரியமான இன்னொரு வசனப் பகுதியானது, இப்பாடத் திற்கான வேதவசனப் பகுதியின் முடிவில் வருகின்றது. பவுலும் பர்னபாவும் தங்கள் "முதல் ஊழிய அறிக்கையை" கொடுத்த போது, அவர்கள் தாங்கள் என்ன செய்திருந்தார்கள் என்று அந்த அறிக்கையைத் தராமல், "தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளை ... அறிவித்தார்கள்" (14:27; 15:4, 12). பவுலின் முதலாம் நற்செய்திப் பிரயாணத்தில் நடந்த எல்லாமும் இனிமையுடையவைகளாயிருக்கவில்லை; ஆனால் அந்த ஊழியக்காரர்கள் பின்னோக்கிப் பார்த்தபோது, நடந்த எல்லாவற்றிலும் தேவனுடைய கிருபையுள்ள கரத்தை அவர்களால் காண முடிந்தது (1 கொரி. 3:9ஐக் காணவும்). சிட்னியில் நடந்தவைகளைப் பற்றிய அறிக்கையை நான் கொடுத்தபோதுகூட தேவனுக்கு உரிய கனத்தை நான் கொடுத்தேன். "தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகள் எல்லாவற்றையும்" என்ற சொற்றொடரானது பவுலின் முதலாம் பயணத்தில் நடந்த முழுவதையும் அடக்கியுள்ளது, ஆனால் இந்தப் பயணத்தின் கடைசிப் பகுதியில் நடந்தவைகள் விளக்கப்படுவதினால் அதுவே தேவன் இந்த ஊழியக்காரர்களின் வாழ்வில் செயல்பட்ட விதத்தை அறியப் போதுமானதாகும்.*

## தேவன் அவர்களுக்குச் சமாதானத்தில் மனமாற்றங்களைக் கொடுத்தார் *(14:20, 21)*

*நமது முந்திய பாடத்தை முடிக்கும் தருவாயில், சவுல் கல்லெறியப்பட்டு, மரித்தாரென்று எண்ணி விடப்பட்டுச் சென்றதை நாம் பார்த்தோம். 14:20ல் நாம், "சீஷர்கள் அவனைச் சூழ்ந்து நிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனே கூடத் தெர்பைக் குப் புறப்பட்டுப் போனான்" என்று நாம் வாசிக்கின்றோம். தெர்பை என்பது லீஸ்திராவுக்குத் தென்கிழக்கில் சுமார் அறுபது மைல் தூரத்தில் இருந்த ஒரு சிறிய கிராமம் ஆகும். வசனம் 21ல்*

“அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து” என்று கூறப்படுகின்றது. அவர்கள் அதன் “சுற்றுப் புறங்களிலும்” பிரசங்கித்தார்கள் (வ. 6). ஏதோ சில காரணங்களினால் அந்தியோகியா, இக்கோனியா ஆகிய பட்டணங்களில் இருந்து வந்த யூதர்கள் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றித் தெர்பைக்கு வரவில்லை. (பவுல் மரித்ததாக அவர்கள் நினைத்ததும், உடனே லீஸ்திராவை விட்டுச் சென்றார்கள் என்று யூகிக்கப்படுகின்றது. இதன் விளைவாக, பவுல் உயிர்ப்படைந்து தொடர்ந்து பிரசங்கித்ததை அவர்கள் அறியாதிருந்தார்கள்.) ஆகையால், அவர்களால் தொல்லைகள் இல்லாமல் அங்கு ஊழியம் செய்ய முடிந்தது.[2] தேவன் அவர்களின் பிரயாசங்களை ஆசீர்வதித்தார், அவர்கள் அங்கே ஆத்துமாக்களின் மாபெரும் அறுவடையொன்றை மகிழ்ச்சியுடன் அனுபவித்தார்கள். தெர்பையிலிருந்த “அநேக சீஷர்கள்” (வ. 21) பற்றி நாம் ஒன்றும் அறிவதில்லை; “தெர்பையனாகிய காயு” என்ற ஒரு பெயர் மட்டுமே பதிவாகியுள்ளது (20:4). ஆயினும், அந்தியோகியா, இக்கோனியா மற்றும் லீஸ்திரா என்ற பட்டணங்களில் உண்டான கலகங்களுக்குப் பின்னர், சமாதானத்துடன் நற்செய்தியைப் பிரசங்கித்தது எவ்வளவு மகிழ்ச்சிக்கு உரியதாய் இருந்திருக்கும்!

## தேவன் அவர்களுக்குத் திரும்பிச் செல்லும் தைரியத்தைக் கொடுத்தார் (14:21)

கலாத்தியாவின் கிழக்கு ஓரப்பகுதியில் தெர்பை இருந்தது. தெர்பையில், பவுலும் பர்னபாவும் சிலிசியாவின் வாசலுக்கு வெகு தொலைவில் இல்லை. அப்பாதையானது தாரஸ் மலைகளில் சென்று, பவுலின் சொந்த ஊராகிய தர்சுவை நோக்கி சிலிசியாவின் தாழ்ந்த நிலப்பகுதி வழியே சென்றது. அவர்களது முதல் பயணத்தின் கடைசிப் பகுதியாக தெர்பைப் பட்டணம் இருந்தது - எனவே அங்கு அவர்கள் ஊழியத்தை முடித்த பின்னர், அப்பாதை வழியே கிழக்கு நோக்கிச் சென்று, சீரியாவின் அந்தியோகியாவுக்குச் சுருக்கு வழியில் சென்று விடலாம் என்று எண்ணுவது இயல்பானதாய் இருந்திருக்கும்.

இதற்கு மாறாக, "அந்தப் பட்டணத்தில் [தெர்பையில்] அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கின பின்பு, லீஸ்திராவுக்கும், இக்கோனியாவுக்கும், அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து" (வ. 21).[3] லீஸ்திரா? இக்கோனியா? அந்தியோகியா? பவுல் லீஸ்திராவில் கல்லெறியப்பட்டார். இக்கோனியாவில் அவரும் பர்னபாவும் கல்லெறியப்படுவதிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினார்கள். அவர்கள் அந்தியோகியாவிலிருந்து துரத்தப்பட்டிருப்பார்கள்! இருப்பினும், நாம் பார்க்கப் போகின்றபடி, அவர்கள் மறுபடியும் அங்கு சென்றதற்குப் பலத்த காரணம் ஒன்று இருந்தது - அவர்கள் தூஷிக்கப்பட்ட பட்டணங்களுக்குத் திரும்பிச் செல்ல தேவன் அவர்களுக்குத் தைரியம் கொடுத்திருந்தார்!

## தேவன் அவர்களுக்குச் சீஷர்களின் மேல் பரிவிரக்கத்தைக் கொடுத்தார் (14:21, 22)

பவுலும் பர்னபாவும், லீஸ்திரா, இக்கோனியா, அந்தியோகியா ஆகிய பட்டணங்களுக்குத் திரும்ப வந்தது ஏன்? இயேசு பிரதான கட்டளையைக் கொடுத்த போது, "ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி,[4] பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். ..." (மத். 28:19, 20) என்று கூறியிருந்தார். மூலவசனத்தில், இக்கட்டளையில் ஒரே ஒரு வினைச் சொல் மாத்திரம் உள்ளது, அது "சீஷர்களாக்கி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (தமிழில் "உபதேசம் பண்ணுங்கள்" என்பதற்கு இவ்வினைச் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது; "சீஷர்களாக்கி" என்பது வினையெச்சமாக்கப் பட்டுள்ளது). பிறகு சீஷராக்குவது எப்படி என்பதற்கு மூன்று வினையெச்சங்கள் உள்ளன: "புறப்பட்டுப் போய்" ("போங்கள்" என்று NASBயில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது), "ஞானஸ்நானங் கொடுத்து" மற்றும் "உபதேசம் பண்ணுங்கள்" (இது மட்டும் மாறி வந்துள்ளது). பவுலும் பர்னபாவும் சுவிசேஷத்துடன் "போனார்கள்", அநேகரைக் கிறிஸ்துவுக்குள் "ஞானஸ்நானப்படுத்தினார்கள்", ஆனால் அவர்களின் வேலை

அத்துடன் முடியவில்லை. கிறிஸ்து கட்டளையிட்ட யாவற்றை யும் புதிய கிறிஸ்தவர்கள் "கடைப்பிடிக்கும்படி" (அபாயத்தின் மத்தியிலும்) அவர்களுக்கு "உபதேசம் பண்ணுவதற்காக" அவர்கள் திரும்பி வர வேண்டியதாயிருந்தது.

புதிய கிறிஸ்தவர்கள் பக்குவமடைய உதவி செய்தல் என்பது அவர்களைக் கிறிஸ்தவர்களாக்கும் ஊழியத்தின் ஒரு பாகம் என்பதை ஊழியக்காரர்கள் புரிந்து கொள்ள வேண்டும். உண்மையில் நாம் அனைவரும் இப்பாடத்தைக் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். புதிய கிறிஸ்தவர்களை வளமைப்படுத்த நாம் தயாராகாத வரையிலும் இழந்து போகப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல நாம் தயாராவதில்லையென்றே பிரதான கட்டளை அறிவிக்கின்றது.

பவுலும் பர்னபாவும் "லீஸ்திராவுக்கும், இக்கோனியா வுக்கும், அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து, சீஷருடைய மனதைத் திடப்படுத்தி"[5] (வ. 21ஆ, 22அ). முதலில் அவர்கள் "விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொன்னார்கள்" (வ. 22ஆ). இவ்விடத்தில் "விசுவாசம்" என்பது இயேசுவின் நல்லொழுக்க விதிகள் முழுமையையும் குறிக் கின்றது. கிறிஸ்துவுக்குள் குழந்தைகள் யாவரும் தங்கள் கர்த்தருக்கும் அவரது போதனைகளுக்கும் உண்மையுள்ளவர் களாய் இருக்க வேண்டும் என்று ஊழியக்காரர்கள் வற்புறுத்தி னார்கள். அப்படி அவர்கள் இருக்கையில், தாங்கள் எதிர் கொண்ட அறைகூவல்களில் சீஷர்களிடத்தில் நேர்மையுடன் இருந்தார்கள். அவர்கள் சீஷர்களிடத்தில், கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பிரச்சனைகள் இல்லாதிருப்பதென்று சித்தரிக்க வில்லை. மாறாக, அவர்கள், "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்" (வ. 22இ; நாம் என்ற வார்த்தையில் பவுலும் பர்னபாவும் தங்களையும் புதிய கிறிஸ்தவர்களுடன் இணைத்துக் கொண் டார்கள்.) என்றுதான் கூறினார்கள். பவுலும் பர்னபாவும் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் "அநேக உபத்திரவங்கள்" என்பதைத் தவறாமல் புரிந்து கொள்ள முடிந்தது. அந்த இரு மனிதர்கள் மேலும் குவிக்கப்பட்ட தூஷணங்களை அவர்கள் கண்டிருந்தார்கள். யாரோ ஒருவர், "இயேசு வாழ்வைச் சுலபமாக்குவதற்கு வரவில்லை, மாறாக மனிதர்களை மாபெரும் நிலைக்குக்கொண்டு செல்லவே

*வந்தார்" என்று கூறினார். உபத்திரவங்களைத் தேவனுடைய உதவியினால் சகித்துக் கொள்ளும்போது, அவைகள் நம்மைப் பெலப்படுத்துகின்றன (ரோமர் 5:3, 4; யாக். 1:2-4). ஆயினும், "தேவனுடைய இராஜ்யம்" என்ற சொற்றொடரானது, புதிய கிறிஸ்தவர்கள் சிலுவையைச் சகித்தால் முடிசூட்டப் படுவார்கள் என்பதைத் தெளிவாக்கியது. பரலோகத்தின் (இந்த மக்கள் ஏற்கனவே இராஜ்யம்/சபையின் குடிமக்களாகி யிருந்தனர் [கொலோ. 1:12, 13]; ஆகையால் இவ்விடத்தின் சந்தர்ப்பப் பொருளில் "இராஜ்யம்" என்பது பரலோகத்தைக் குறிப்பிடுவதாகவே இருக்க வேண்டும். "அப். நட. 1" இதழில் சொற்பொருள் அகராதியில் "Kingdom" "இராஜ்யம்" என்ற வார்த்தையின் கீழ் காணவும்.) நம்பிக்கையானது எல்லா தியாகங்களையும் மதிப்புள்ளதாக்கியது!*

## தேவன் அவர்களுக்கு முன்னோடிகள் கொண்ட சபைகளைக் கொடுத்தார் (14:23)

*எதிர்காலத்திற்கென்று சகோதரர்களை ஆயத்தம் பண்ணு வதற்கு பவுலும் பர்னபாவும் கையாண்ட மிக முக்கியமான வழி முறைகளில் ஒன்று, அவர்களுக்கு ஆவிக்குரிய முன்னோடி களை ஏற்படுத்தி வைத்தது ஆகும். வசனம் 23ல் நாம், "அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக் கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்" என்று படிக்கின்றோம். இவ்வசனமானது பின்வரும் தனிச்சிறப்புள்ள கருத்துக்களைக் கொண்டுள்ளது:*

*(1) பவுலும் பர்னபாவும் ஒவ்வொரு பட்டணத்திலும் ஊழியம் செய்கையில், சபைகளை நிலைநாட்டியதாக இங்குதான் நமக்கு முதல் முதலாகக் கூறப்படுகின்றது (அப். 14:23). அவர்கள் ஒரு பட்டணத்தை விட்டுச் செல்லுகை யில் சீஷர்கள் பலவாறு சிதறிப்போகும்படி விட்டுச் செல்ல வில்லை; மாறாக ஆராதனை மற்றும் ஐக்கியத்தில் (அப். 2:42, 46க்கான குறிப்புகளைக் காணவும்) சபையார் ஒன்று கூடும்படியாகவே அவர்கள் விட்டுச் சென்றார்கள். சபைகளை*

நிலை நாட்டுதல் என்பது ஊழியக்காரரின் ஊழியத்தில் முழுமையடையும் பங்காக உள்ளது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஒரு பிராந்திய சபையின் அங்கமாக இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாகும் (9:26 - ன் குறிப்புகளைக் காணவும்).

(2) கலாத்தியாவில் இருந்த பிராந்திய சபைகள் சில காலத்திற்கு முன்னோடிகளை நியமிக்காமலேயே இருந்தது. மூப்பர்கள் இல்லாமலும் ஒரு சபையானது வசனத்தின்படி இயங்கக் கூடியதாய் இருக்க முடியும்.[6]

(3) இருப்பினும் அந்த சபைகள் முன்னோடிகள் நியமனமின்றி அதிக காலம் இருந்து விடவில்லை. ஒரு சபையானது எப்பொழுதும் ஆவிக்குரிய வழிகாட்டுதல் (தலைமைத்துவம்) இல்லாமலேயே இருந்து விட வேண்டும் என்று தேவன் விரும்புவதில்லை. பவுல் பின்னாளில் தீத்துவை குறைவாயிருக்கிறவைகளை ''ஒழுங்கு படுத்தும்படிக்கும்'' மற்றும், ''பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும் படிக்கும்'' (தீத்து 1:5) கிரேத்தா தீவிலே விட்டு வந்தார். தலைமைத்துவத்தை ஏற்படுத்துவதே ஒவ்வொரு ஊழியக்கார ருக்கும் இருக்கக் கூடிய மிகப் பெரிய அறைகூவல்களில் ஒன்றாகும். ஒவ்வொரு சபையிலும் தகுதியுள்ள முன்னோடிகள் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புவது ஏன்? முதலாவதாக, தனிநபர்கள் ஒவ்வொருவரும் செய்யப்பட வேண்டியவற்றுக்குப் பொறுப்பாளியாவார்கள் என்பதும், இரண்டாவதாக கணக்கொப்புவிக்கும் உணர்வை ஒவ்வொரு வரிடத்திலும் வளர்ப்பதற்கும் ஆகும். உறுப்பினர்கள் முன்னோடிகளிடத்திலும், முன்னோடிகள் தேவனிடத்திலும் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றார்கள் (எபி. 13:17).

(4) பவுலினால் நியமிக்கப்பட்ட முன்னோடிகள், "மூப்பர் கள்" என்று அழைக்கப்பட்டார்கள். சபையின் மூப்பர்களைப் பற்றி முதல் முதல் நாம் 11:30ல் படிக்கின்றோம். "மூப்பர்கள்" என்ற வார்த்தை presbyter என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். இது ''முதியவர்'' என்ற அர்த்தம் கொடுக்கும் வார்த்தையாகும். பொதுவான கருத்தில் பயன்படுத்தும்போது இவ்வார்த்தையானது வயதில் முதிர்ந்த எவர் ஒருவரையும் குறிப்பிட முடியும் (தீத்து 2:2, 3[7]). ஒரு குறிப்பிட்ட கருத்தில் பயன்படுத்தப்படும்போது, இது

*சபையின் தலைமைத்துவத்தில் ஒரு குறிப்பிட்ட பதவியைக் குறிப்பிடுகின்றது. அப். 20:28ல் நாம் படிக்கப்போகின்றபடி, மூப்பர்கள், “மேய்ப்பர்கள்” என்றும் “கண்காணிகள்” என்றும் அறியப்பட்டார்கள், அறியப்படுகின்றார்கள். (பிரசங்கிப்பவர் “ஒரு மேய்ப்பர்” எனப்படமாட்டார்.)*

*(5) ஒவ்வொரு பிராந்திய சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் இருந்தார்கள் என்பது வசனம் 23ல் சுட்டிக்காட்டப் படுகின்றது (தீத்து 1:5). புதிய ஏற்பாடு முழுவதையும் நீங்கள் படித்துப் பார்த்தால், ஒரே ஒரு மூப்பர் (அல்லது மேய்ப்பர் அல்லது ஆயர்) ஒரு சபையில் இருந்ததாக நீங்கள் எவ்விடத் திலும் படிக்க மாட்டீர்கள்.*[8] E.H. *ட்ரென்சார்டு என்பவர், ‘‘அப்போஸ்தலர்களின் காலத்தில், மூப்பர் = ஆயர் (கண்காணி) = மேய்ப்பர் என்பது பரவலாக ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளது, மற்றும் ஒவ்வொரு பிராந்திய சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட இவர்களின் குழுவானது ஒரு முன்னோடி அமைப்பை [அதாவது தலைமைத்துவத்தை] ஏற்படுத்தியது” என்று எழுதினார்.*

*(6) கலாத்தியாவில் இருந்த பிராந்திய சபைகள் மூப்பராகத் தகுதி பெறும் பொருட்டு மனிதர்களை எப்பொழுதும் பயிற்சியளித்து வளர்த்துக் கொண்டிருக்கவில்லை. 1 தீமோ. 3:1-7 மற்றும் தீத்து 1:5-9 வசனப் பகுதிகளினால் கூறப்படும் தகுதிகளைப் பார்த்துத் திணறிப் போய், ஒருவர் மூப்பராக வேண்டுமென்றால் அவர் மனிதர்களுக்கெல்லாம் மேலான மனிதராக இருக்க வேண்டும் என்று முடிவெடுத்து விடுவது சுலபமாகும். சில வேளைகளில், ஒரு உள்ளூர் சபையானது அநேக வருடங்களுக்கு மூப்பரை நியமிக்காமலே செயல் படுகின்றது. அப். 14ல் நியமிக்கப்பட்ட மூப்பர்கள் கிறிஸ்தவர் களாகி ஒரு சில மாதங்களே ஆகியிருந்திருக்கும் (பவுல் தாம் தீமோத்தேயு மற்றும் தீத்துவுக்குச் சுட்டிக் காட்டியிருந்த மூப்பருக்கான தகுதிகளை அவரே அலட்சியம் பண்ணியிருப் பார் என்று கூறுவது நிச்சயம் முடியாது).*

*மூப்பர்கள் (புதிதாகக் குணப்பட்டவர்) நூதன சீஷனா யிருக்கக் கூடாது (1 தீமோ. 3:6) என்று தாமே நியமித்திருந்த தகுதியை மீறாமல் பவுல் எப்படி கலாத்தியாவில் மூப்பர்களை நியமிக்க முடியும்? நாம் கற்றறிந்த யூகங்களை மட்டுமே மேற்கொள்ள முடியும்: மனமாற்றப்பட்ட சில யூதர்கள்*

அநேகமாக ஏற்கனவே தேவனுடன் இருந்த தங்கள் உறவில் பக்குவப்பட்டவர்களாகவும் அன்றிருந்த வேதவசனமாகிய பழைய ஏற்பாட்டில் தேர்ந்த அறிவுடையவர்களாகவும் இருந்திருக்கலாம். மேலும், இவர்களில் சிலரின் தலைகளில் பவுல் தமது கைகளை வைத்திருக்கலாம் (2 தீமோ. 1:6) [இவ்வசனத்தில் பவுல் தீமோத்தேயுவின் மீது கைகளை வைத்ததாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது], அவர்களின் அறிவை அற்புதமாய் விரிவடையச் செய்திருக்கலாம் (புதிய ஏற்பாட்டில் சத்தியங்களை அவர்களுக்குக் கொடுத்திருக் கலாம்) மற்றும் தலைமைத்துவ வரங்களையும் அதிகப்படுத்தி யிருக்கலாம் (ரோமர் 12:6, 8). மற்றும், பவுலும் பர்னபாவும் மற்றவர்கள் தங்கள் தாலந்துகளை வளர்த்துக் கொள்வதற்காக உற்சாகப்படுத்துவதில் நம்பிக்கையாயிருந்தார்கள் (2 தீமோ. 2:2), எனவே பிரகாசமான வாய்ப்புள்ள மனிதர்களை அவர்கள் தேர்ந்தெடுத்து அப்பகுதியில் இருக்கையில் அவர்கள் மீது விசேஷித்த கவனத்தைச் செலுத்தியிருக்கலாம்.[9]

இது எப்படிச் சாத்தியமாயிற்று என்று நாம் யூகித்து முடித்த பின்பு, கலாத்தியாவின் சபைகளில் மூப்பர்கள், இன்றைய நாளில் சாத்தியப்படும் காலம் என்று நினைக்கும் கால அளவுக்கு முன்னதாகவே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்ற உண்மை அப்படியே நிலைநிற்கின்றது.[10] ஒருவேளை ஒருவர், "கலாத்தியாவில் இருந்த மூப்பர்கள் எருசலேமில் ஊழியம் செய்வதற்குத் தகுதியடைய வேண்டியதாயிராமல், அவர்கள் கலாத்தியாவின் சபைகளில் ஊழியம் செய்வதற்குத் தகுதி பெற வேண்டியதாய் இருந்தது" என்று கூறியது சரியாகவே இருக்கிறது. 1 தீமோத்தேயு 3 மற்றும் தீத்து 1ல் காணப்படும் தகுதியாம்சங்களில் சில முழு நிறைவானவையாகும்,[11] ஆனால் அவைகளில் பெரும்பாலானவை சார்புள்ளவைகளேயாகும். கலாத்தியாவில் "போதக சமர்த்தராய்" கருதியிருக்கப்படக் கூடிய ஒருவர் எருசலேமில் போதக சமர்த்தராய்க் கருதி யிருக்கப்பட முடியாதிருக்கலாம். "மூப்பர்கள் நமக்கிருக்க வேண்டும்" என்பதற்காக யாரையாவது மூப்பர்களாக்கி விடலாம் என்பதை நாம் ஒருபொழுதும் ஆதரித்து விடக் கூடாது, அதே வேளையில் ஒருவரும் தகுதி பெறாதபடிக்குத் தகுதியாம்சங்களை இறுக்கமாக்கவும் கூடாது. "ஏற்புடைய ஒரு காலகட்டத்திற்குள்" முன்னோடிகள் வளர்ச்சியடையப்

பெற்று, நியமிக்கப்பட வேண்டும்.

(7) மனிதர்கள் மூப்பர்களுக்கான தகுதிகளை அடையும் போது, அவர்கள் ஒழுங்கும் கிரமமுமான முறையில் தேர்ந் தெடுத்து ஏற்படுத்தப்பட வேண்டும்.[12] வசனம் 23ல் இவ்வளவு தான் தெளிவாய்க் காணப்படுகின்றது, ஆனால் ஒவ்வொரு செயலும் எப்படிச் செய்யப்பட்டது என்று நாம் அறியவில்லை. 6ம் அதிகாரத்தில் பந்தி விசாரணைக்கு மனிதர்கள் தேவைப் பட்ட போது, அவர்களுக்கிருக்க வேண்டிய தகுதியாம்சங் களை அப்போஸ்தலர்கள் சபையாரிடம் கூறிவிட்டு தேர்வு செய்தலை சபையாரிடத்திலேயே விட்டு விட்டனர் (6:3). அம்மனிதர்கள் தேர்வு செய்யப்பட்ட பிறகு, அப்போஸ்தலர் கள் அவர்களை ஏற்படுத்தி வைத்தார்கள் (நியமித்தார்கள்). கலாத்தியாவின் சபைகளில் மூப்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட போதும் இதே போல ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கலாம்.

கலாத்தியாவில் மூப்பர்கள் தேர்தெடுக்கப்பட்டபோது நடந்தது என்ன என்பதை மிகச் சரியாக நாம் அறிய வேண்டும் என்று நான் விரும்புகின்றேன், ஆனால் நாம் அதை அறிய வில்லை. என்னோடே கூடச் சேர்ந்து வசனம் 23ல் பயன் படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளுடன் நீங்களும் சற்றுப் போராடுங்கள். "ஏற்படுத்தி"[13] என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "கை" மற்றும் "நீட்டுதல்" என்ற வார்த்தைகளை இணைத்து உண்டாக்கப்பட்டது. இந்த வார்த்தையானது, "(1) கையை நீட்டுதல், (2) கைகளைக் காட்டுவதால் நியமித்தல், அல்லது (3) மேற்கொள்ளும் முறையைக் கவனிக்காது நியமித்தல் அல்லது தேர்ந்தெடுத்தல் என்று அர்த்தப்பட முடியும்" என்று லெவிஸ் ஃபோஸ்டர் கூறினார். இவ்வார்த்தையானது தேர்ந்தெடுக்கும் செயல்முறை அல்லது நியமிக்கும் செயல் முறையைக் குறிப்பிட முடியும். பிறகு, "When *they* had appointed elders for them" என்ற சொற்றொடரில் "they" என்ற வார்த்தை உள்ளது (தமிழில் அவர்கள் என்ற வார்த்தை காணப்படவில்லை, ஆனால் முற்றுவினையாக வசனத்தின் கடைசியில் "ஒப்புவித்தார்கள்" என்று வரும் சொல்லானது அவர்களை குறிப்பதாக இருக்கின்றது): சந்தர்ப்பப் பொருளில் காணுகையில் இவ்வார்த்தை பவுலையும் பர்னபாவையும் குறிப்பிடுவதாகக் காணப்படுகின்றது, ஆனால் மற்ற சாத்தியக் கூறுகளும் உள்ளது

(இவ்வார்த்தை முழு சபையாரையுமோ அல்லது சபையாரின் பிரதிநிதிகளையோ குறிக்கக் கூடும்). கடைசியாக, "அவர்களுக்கு" என்ற வார்த்தை ("அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி") உள்ளது. மூல மொழியில், "அவர்களுக்கு" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "பிரதி செயப்படு பொருளை"[14] குறிக்கும் சொல்லாக இருக்கின்றது. ஆனால் இதற்கு முன்னதாக முன்னிடைச் சொல் எதுவும் இல்லை. NASB மொழிபெயர்ப்பாளர்கள் "for" ("க்கு") என்ற வார்த்தையை இவ்விடத்தில் இணைத்துள்ளார்கள், ஆனால் மற்ற முன்னிடைச் சொற்களும் இணைக்கப்பட முடியும்.

மேற்சொன்னவைகளைக் கருத்தில் கொண்டு, "அவர்கள் ... அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி" என்ற சொற்றொடருக்குப் பின்வரும் அர்த்தங்கள் கொள்ள முடியும்: "அவர்கள்" என்பது சபையாரைக் குறிக்குமென்றால் (அல்லது அவர்களின் பிரதிநிதிகளைக் குறிக்குமென்றால்), தேர்ந்தெடுக்கும் செயல்முறையே அடிப்படை கருத்தாயி ருக்கும் (அவர்கள் தாங்கள் தேர்ந்தெடுத்தவர்களை நோக்கி "தங்கள் கைகளை நீட்டினார்கள்" என்று பொருள்படும்). "அவர்கள்" என்பது பவுலையும் பர்னபாவையும் குறிப்பதாக வும், "ஏற்படுத்தி" என்பது தேர்ந்தெடுக்கும் செயல் முறையைக் குறிப்பதாகவும் இருந்தால், "with" (உடன்) என்ற முன்னிடைச் சொல் இவ்விடத்தில் இணைக்கச் சிறந்ததாகும்: "They appointed elders *with* them." William's translation - "They *helped* them select elders in every church" என்றுள்ளது. சபைகள் யாவும் புதிய கிறிஸ்தவர்களால் ஆனவை என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு, பவுலும் பர்னபாவும், தேர்ந்தெடுக்கும் செயல்முறை யில் உறுப்பினர்களுக்கு உதவி செய்திருப்பார்கள் என்பது நிச்சயம்.[15]

இருப்பினும், தேர்ந்தெடுக்கும் செயல்முறையல்ல ஆனால் நியமிக்கும் ஆராதனையே வசனம் 23ன் முக்கிய கருத்தாகும் என்று அநேக மொழிபெயர்ப்பாளர்கள் நம்புகின்றார்கள். அம்மனிதர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது பற்றி மொழிபெயர்ப் பாளர்களின் கருத்து சரியானதென்றால், அநேகமாக, பவுலும் பர்னபாவும் அப். 6ல் பன்னிருவரின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி, மூப்பர்களுக்குரிய தகுதியாம்சங்களைச் சபையின் உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறி, அத்தகுதிகள் கொண்ட

மனிதர்களைத் தேர்ந்தெடுக்கும்படி அவர்களிடம் கூறியிருக்கலாம் (அவர்களுக்குத் தேவையான உதவியைச் செய்திருக்கலாம்). H. லியோ போல்ஸ் அவர்கள், "மூப்பர்கள் எவ்விதம் நியமிக்கப்பட்டார்கள் என்பதைப் புதிய ஏற்பாடு நமக்குக் கூறாததால், ஐக்கியத்தைப் பெருக்கும் மற்றும் கொள்கையை மீறாததாயிருக்கும் எந்த ஒரு செயல் முறையும் இதில் பின்பற்றப்படலாம் என்று காணப்படுகின்றது'' என்று சொன்னது சரியாகவே இருக்கின்றது. (வெகு ஜனப் புகழ் யாருக்குள்ளதென்று போட்டி நடத்தி மூப்பர்களைத் தேர்ந்தெடுத்தல் என்பது வேதாகமக் கொள்கையை மீறும் ஒரு செயல் முறையாகும்.[16])

நியமிக்கும் ஆராதனையே வசனம் 23ன் கருத்தாயிருக்கின்றது என்று கருத்துக் கொண்டு, இந்த ஏழாம் பகுதியின் தொடக்கத்தில் உள்ள வார்த்தைகளுக்கு நாம் மறுபடியும் திரும்புவோம்: ''மனிதர்கள் மூப்பர்களுக்கான தகுதிகளை அடையும்போது, அவர்கள் ஒழுங்கும் கிரமமுமான முறையில் தேர்ந்தெடுத்து ஏற்படுத்தப்பட வேண்டும்." இந்த மூப்பர்கள் எவ்விதம் ஏற்படுத்தப்பட்டார்கள் என்பதைக் கவனியுங்கள். முதலாவது, ஜெபம் மற்றும் உபவாசத்துடன் கூடிய ஆராதனை ஒன்று பயபக்தியுடன் ஏறெடுக்கப்பட்டது (13:3 ஐக் காணவும்). மூப்பர்களை நியமித்தல் என்பது ஒரு விசேஷ நிகழ்ச்சியாதலால் விசேஷக் கவனம் அதற்குத் தேவைப்பட்டது. பிறகு, ''அவர்கள் விசுவாசித்துப் பற்றிக் கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்.'' இவ்வசனப்பகுதியில், "அவர்களை" என்பது அப்போது நியமிக்கப்பட்ட மூப்பர்களைக் குறிக்கும்; அவர்கள் தங்களின் புதிய பொறுப்பினை எதிர்கொள்வதற்கு கர்த்தரின் உதவி அவர்களுக்கு அவசியமாகும். "அவர்கள்" என்பது முழு சபையாரையும் குறிப்பதாகக் கூட இருக்கலாம். கலாத்தியாவிலிருந்த கிறிஸ்தவர்கள், "ஓநாய்களின் மத்தியில் ஆடுகளைப் போல இருந்தார்கள். ஆனால் அவர்கள், ஆடுகளின் பிரதான மேய்ப்பரிடம் ஒப்புவிக்கப்பட்டார்கள், மந்தையில் இருந்த அவர்களைப் பாதுகாக்கும்படி அவர்கள் துணை மேய்ப்பர்களிடம் ஒப்புவிக்கப்பட்டார்கள்" என்று மெக்கார்வி விளக்குகிறார்.

இந்த ஊழியர்கள் தாங்கள் அன்பு காட்டப்பட்டும், அன்பு காட்டியும் இருந்த கலாத்தியாவின் கிறிஸ்தவர்களை விட்டுப்

பிரிந்தபோது நடந்ததை நினைக்கையில், என் அனுபவத்தில் நான் பெற்ற கண்ணீர்க் காட்சிகள் என் மனதிற்கு வருகின்றன. (20:36-21:1 காணவும்; "God Be With You" என்ற பாடலை சற்றாவது கண்ணீர் சிந்தாமல் எனது மனைவியால் பாட முடியாது.) பவுலும் பர்னபாவும் கண்ணீர் சிந்தாமலிருப்பது கடினம் என்று உணர்ந்தாலும், சபையார்களை ஆவிக்குரிய தலைமைத்துவமில்லாமல் விட்டுவிடவில்லை என்ற உறுதி யான திருப்தியை அவர்கள் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு ஊழியக்காரரும் விட்டுச் செல்லும் வேளையில், சுய ஆளுகை யுடைய, சுயமாய்த் தாங்கக் கூடிய, சுயமாய்ப் பரவக் கூடிய சபையாக விட்டுச் செல்வதே ஒவ்வொரு ஊழியக்காரரின் இலக்காக இருக்க வேண்டும்.

## தேவன் அவர்களுக்கு அந்தியோகியாவினால் உறுதிப்பாட்டைக் கொடுத்தார் (14:24-28)

பவுலும் பர்னபாவும் தங்கள் ஊழியத்தை நிறைவேற்றிய பிறகு வீடு நோக்கிப் புறப்பட்டார்கள்.[17] "பின்பு பிசீதியா[18] நாட்டைக் கடந்து, பம்பிலியா நாட்டிற்கு வந்து" (வ. 24), அங்கு யோவான் மாற்கு இதற்கு முன்பு அவர்களை விட்டுப் பிரிந்த இடமாகிய பெர்கே[19] பட்டணத்திற்கு வந்தார்கள் (13:13). இதற்கு முன் அவர்கள் அந்தப் பட்டணத்தில் பிரசங்கித்திருக்க வில்லை (ஒருவேளை பவுல் சுகவீனமடைந்து இருந்ததால் பிரசங்கியாமல் போயிருக்கலாம்; 13:13, 14க்கான குறிப்பு களைக் காணவும்); ஆனால், இப்பொழுது அவர்கள் அங்கு வந்து இருந்த வேளையில், இயேசுவைப் பற்றி மக்களிடத்தில் பேசினார்கள். பிறகு, "பெர்கே ஊரில் வசனத்தைப் பிரசங் கித்து, அத்தலியா பட்டணத்திற்குப் போனார்கள்" (14:25), அதுவே அப்பகுதியில் பிரதான துறைமுகமாய் இருந்தது. அங்கு தாங்கள் போகவிரும்பிய இடத்திற்குப் புறப்பட்டுச் செல்லும் ஒரு கப்பலைக் கண்டார்கள்.

அவர்களின் திரும்பும் பயணத்தில் இந்த இடம் வரைக்கும், போன வழியிலேயே திரும்பி வந்திருந்தார்கள். ஆகையால்

அவர்கள் அடுத்து சீப்புரு தீவுக்குச் சென்றிருப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியும். இதற்கு மாறாக, “அங்கே [அத்தலியாவில்] கப்பல் ஏறி ... அந்தியோகியாவுக்கு வந்தார் கள்” (வ. 26). அவர்கள் ஏன் சீப்புரு தீவுக்கு திரும்பிச் செல்ல வில்லை என்று நாம் அறியவில்லை. ஒருவேளை அவர்கள் அந்தியோகியாவுக்கு நேரடியாகச் செல்லும் ஒரு கப்பலைக் கண்டு அவ்வேளையில் சீப்புரு தீவுக்குச் செல்வது அவ்வளவு முக்கியமல்ல என்று முடிவு செய்திருக்கலாம். காரணம் என்னவாயிருந்தாலும், அவர்கள் நேரடியாக அந்தியோகியா வுக்கு கடற்பயணம் செய்தார்கள் “... தாங்கள் நிறைவேற்றின கிரியைக்காகத்[20] தேவனுடைய கிருபைக்கு[21] ஒப்புவிக்கப்பட்டுப் புறப்பட்டு அந்தியோகியாவுக்கு வந்தார்கள்” (வ. 26).

அவர்கள் ஒரு வருடத்திற்கும் மேலாக, அல்லது சில வருடங்களாக[22] நற்செய்திப் பயணத்தில் இருந்ததால் அந்தக் காலகட்டத்தில் அந்தியோகியா சபையார் இவர்களிடமிருந்து எந்தத் தகவலும் பெற்றிருந்ததில்லை. (சீப்புரு தீவில் நடந்த ஊழியம் பற்றி யோவான் மாற்கு திரும்பி வந்தபோது கூறியிருக்கலாம் என்பது ஒரு விதி விலக்காகும்.) “பர்னபாவும், பவுலும் திரும்பி விட்டார்கள்” என்ற வார்த்தை பரவிய போது கிறிஸ்தவ சமூகத்தில் எழுந்து பரவிய உணர்வுக் கிளர்ச்சியைக் கற்பனை செய்து பாருங்கள்! ஊழியக்காரர்கள் அறிக்கை கொடுக்க ஆவலாயிருந்தார்கள், சீஷர்கள் அதைக் கேட்க ஆவலாயிருந்தார் கள். ஆகையால் “அவர்கள் அங்கே சேர்ந்தபொழுது சபையைக் கூடிவரச்செய்து, தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளை ... அறிவித்து” (வ. 27அ). கிறிஸ்தவர்களின் சபை கூடுகையில் ஊழிய அறிக்கை கொடுப்பது வசனரீதியானதே; தேவனுக்கு மகிமையைச் செலுத்துவதே அதிக முக்கியமாகும்.

மெக்கார்வி அவர்கள், “கடினமான யுத்தம் செய்து களத்தி லிருந்து நற்செய்தியுடன் திரும்பி வரும் ஒருவர், கூறப்படாத தமது வரலாறு என்ற சுமையினால் மூச்சுத் திணறிவிடுகின்றார்” என்று கூறினார். இந்தக் கூற்று எவ்வளவு உண்மையானதென்று நான் அறிவேன் - எனது (ஊழிய) வரலாற்றைக் கூற எனக்கு வாய்ப்பளித்த சபைகளுக்கும், நான் செய்த ஊழியத்தின்மேல் நம்பிக்கையை மறுபடியும் உறுதி செய்த சபைகளுக்கும் நான் எவ்வளவு நன்றியுள்ளவனாய் இருக்கின்றேன்! ஊழிய அறிக்கையைத் தவிர்க்க முயற்சி செய்யும் ஒரு சபையானது

தனது ஊழியத்தைப் புரிந்து கொள்வதில்லை.

பவுலும் பர்னபாவும், தங்கள் ஊழிய அறிக்கையில், "அவர் [தேவன்] புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும்" (வ. 27ஆ) அந்தியோகியாவின் கிறிஸ்தவர்களுக்குக் கூறினார்கள். "திறந்த கதவு" என்ற கருத்தானது புதிய ஏற்பாட்டில் (1 கொரி. 16:9; 2 கொரி. 2:12; கொலோ. 4:3; வெளி. 3:8) அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றது. இதன் அடிப்படை அர்த்தம் "வாய்ப்பு" என்பதாகும்: பவுலையும் பர்னபாவையும் பிரசங்கிக்க அனுப்பியதன் மூலம் விசுவாசித்து இரட்சிப்படைவதற்கான வாய்ப்பைத் தேவன் புறஜாதியாருக்குக் கொடுத்தார்.[23] மாபெரும் வாய்ப்பு என்பது இச்சொற்றொடரின் மறை கருத்தாய் உள்ளது: முதல் பயணத்தின் விளைவாக புறஜாதியார் அநேகர் கிறிஸ்தவர்களானார்கள். அந்தியோகியா சபையில் பெரிய சந்தோஷம் ஏற்பட்டிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

"திறந்த கதவு" என்ற கருத்தானது, வாய்ப்பின் கதவு வழியே சிரமமின்றிப் பிரவேசித்து விடலாம் என்ற அர்த்தம் தருவதில்லை என்பதைக் கவனியுங்கள் (1 கொரி. 16:9). பவுலும் பர்னபாவும் தங்களுக்காகத் திறந்த கதவின் அனுகூலத்தைப் பெற்றுக்கொள்ள உபத்திரவப்பட வேண்டியிருந்தது. நம்மில் சிலர் தேவனால் கொடுக்கப்பட்ட திறந்த கதவுகளை, அந்த வாய்ப்புகள் அதிக கடினமாகவும், இருதய நோவை ஏற்படுத்துவதாகவும் தோன்றுவதால் தவறவிட்டு விடுகின்றோம்!

பவுலின் முதல் ஊழியப் பயணம் முடிந்த போது, அப்பயணத்தில் அவரும் பர்னபாவும் ஏறக்குறைய 1,300 மைல்கள் பயணம் செய்திருந்தார்கள்! அதில் 500 மைல்கள் அக்காலத்தில் இருந்த நம்பிக்கையற்ற மரக்கலங்கள் மூலம் கடலிலும், 800 மைல்கள் அக்காலத்தில் பூமியில் இருந்த கரடுமுரடான மற்றும் அபாயம் நிறைந்த சாலைகளின் வழியாகவும் சென்றிருந்தார்கள் (15:26 ஐக் கவனிக்கவும்). அது வரலாற்றை ஏற்படுத்தும் ஒரு பயணமாக இருந்தது. இப்பொழுது அவர்கள் தங்கள் ஆவிக்குரிய மின்கலங்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. இவ்விடத்தில், "அங்கே சீஷருடனே கூட அநேக நாள் சஞ்சரித்திருந்தார்கள்" என்பதுடன் இவ்வரலாறு முடிவடைகின்றது (வ. 28). பவுலும் பர்னபாவும் அங்கு நிரந்தரமாய்த் தங்கியிருக்கவில்லை

என்பதையும், மறுபடியும் அவர்கள் தங்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு தூரதேசங்களுக்குச் செல்ல வேண்டிய வேளை வரும் என்பதையும் இந்த வார்த்தைகள் மறைமுகமாய் உணர்த்துகின்றன.

## முடிவுரை

இப்பொழுது நாம் படித்த வேதவசனப் பகுதியில் நமக்கு அநேக பாடங்கள் தரப்பட்டிருக்கின்றன. நாம் நிறைவேற்றும் எல்லா ஊழியங்களுக்கும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்பதையே அடிப்படையில் நான் வலியுறுத்தி யிருக்கின்றேன் - பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவில் ஊழிய அறிக்கை கொடுத்த போது இதையே செய்தார்கள். ஆயினும் இவ்வசனப் பகுதியில் மற்ற பாடங்களும் இருக்கின்றன, அவைகளில் இழந்து போகப்பட்டவர்களுக் கான விலையேறிய செய்தியும் அடங்கும்: நீங்கள் ஒரு புறஜாதியாராயிருந்தால் (அநேகமாக அப்படித்தான் இருப்பீர் கள்), தேவன் புறஜாதியாருக்குக் கதவைத் திறந்தார் என்பதை உணர்வது ஒரு அற்புதமான அனுபவமாயிருக்கும் - அந்தக் கதவு இன்னமும் திறந்துள்ளது! உங்கள் கர்த்தரை நீங்கள் விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படிவதன் மூலம் இன்றும் அக்கதவின் வழியாக நீங்கள் பிரவேசிக்க முடியும்!

இவ்வசனப் பகுதியில் உள்ள இன்னொரு பாடமாவது: ஒருவர் தாம் கிறிஸ்தவராவதற்கு முன்பு "செல்லுஞ் செலவைக் கணக்குப் பார்க்க வேண்டும்" (லூக். 14:28-30). கலாத்தியாவில் இருந்த சீஷர்களுக்குக் கூறப்பட்டதை நினைவில் வையுங்கள்: "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்" (வ. 22). கர்த்தர் சுலபமான ஒரு வாழ்க்கையை வாக்குத்தத்தம் செய்யவில்லை. இருப் பினும், அவர் நம்மோடு இருப்பதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார் - பரலோகத்தில் அவரோடு இருப்போம் என்ற நம்பிக்கையானது நாம் செய்யும் ஒவ்வொரு தியாகத்தையும் மதிப்புள்ளதாக்குகின்றது!

நீங்கள் இன்னும் கிறிஸ்தவராகாதிருந்தால், உங்கள் வாழ் நாளைக் கர்த்தருக்கென்று நீங்கள் ஒப்புக் கொடுப்பதற்காக ஜெபம் செய்கின்றேன். அவருடைய வாய்ப்பின் கதவானது

*உங்களுக்காகத் திறந்திருக்கும்பொழுதே அதன் வழியாகப் பிரவேசியுங்கள்!*[24]

## ❦ பிரசங்கக் குறிப்புகள் ❦

*"முதலாவது ஊழிய அறிக்கை" என்பது இந்தப் பாடத்திற்கான இன்னொரு தலைப்பாக இருக்க முடியும். ஊழியக்காரர்களின் கூட்டத்திற்கோ அல்லது பயிற்சி ஊழியர்களுக்கோ இந்தப் பாடத்தை நான் நடத்தினால், "பின் கண்டவைகளைச் செய்யாத வரைக்கும் ஊழியம் நிறைவடைவதில்லை" என்று அப்பாடத்திற்குத் தலைப்பிட்டு, பின்வரும் நான்கு சிந்தனைகளைத் தருவதுண்டு: (1) நீங்கள் ஞானஸ்நானம் கொடுத்தவர்களுக்குத் தொடர்ந்து போதித்தல், (2) சபையில் தலைமைத்துவத்தை வளர்த்தல், (3) உங்களுக்கு உதவும் சபை(களு)க்குத் தகவல் அறிவித்தல், (4) தேவனுக்கு மகிமையைச் செலுத்துதல்.*

*இப்பாடமானது நீங்கள் ஆராதிக்கும் சபைக்கு கடந்த ஆண்டிலோ அல்லது காலத்திலோ தேவன் அருளிச் செய்தவைகளைப் பற்றிப் பிரசங்கிப்பதற்குரிய மிதி பலகையாக* (spring board) *பயன்படக்கூடும்.*

---

குறிப்புகள்

[1]*"உடன்படுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "பொதுவில் அனுபவித்தல்" என்ற அர்த்தம் தரும் koinonia என்ற வார்த்தையின் ஒரு வடிவமாகும் (*KJV*யில்* "fellowship" *என்றுள்ளது). பவுல், பிலிப்பிப் பட்டணத்துக் கிறிஸ்தவர்கள் ஊழியத்தில் தன்னுடன் பகிர்ந்து கொண்டதாகக் கூறினார்.* [2]*அங்கு எதிர்ப்பு இல்லையென்ற உண்மையைப் பவுல் குறிப்பிட்டதோடு மட்டுமின்றி, பவுல் தாம் உபத்திரவப்பட்ட கலாத்தியாவின் பட்டணங்களின் பட்டியலில் தெர்பையைச் சேர்க்கவில்லை என்பதையும் கவனியுங்கள் (2 தீமோ. 3:11).* [3]*பவுல் தெர்பைக்கு மறுபடியும் சென்றார் (16:1).* [4]KJV*யில்* "teach" *என்றுள்ளது, ஆனால் கிரேக்க மொழியில்* "teach" *என்பதற்குரிய வழக்கமான வார்த்தை பயன்படுத்தப்படவில்லை. "சீஷர்" என்ற வார்த்தையின் வினைவடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளதால் "சீஷராக்கி" என்பதே சிறந்த மொழிபெயர்ப்பாகும். நாம் போதிக்காமல் யாரையும் "சீஷராக்க* [*கற்பவர்களாக்க*] *முடியாது" என்பது உண்மையே, எனவேதான் அடுத்ததாக போதித்தல் என்ற கருத்து வருகின்றது.* [5]KJV *யில்* "confirming" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (தமிழில் "திடப்படுத்தி" என்றுள்ள) கிரேக்க வார்த்தைக்கும், "ஏழுதிருவருட சாதனங்களில்" ஒன்றாகக் கற்பனையில் ஏற்பட்ட "திடப்படுத்தும் சடங்கு" அல்லது "உறுதி பூசுதல் சடங்கு"*

என்ற சடங்குக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. NASBயில் சுட்டிக் காட்டப்படுகின்றபடி, இவ்விடத்தில் இந்த கிரேக்க வார்த்தை "பெலப்படுத்துதல்" என்ற அர்த்தத்தை மட்டுமே தருவதாயுள்ளது, இது பவுல் மற்றும் பர்னபா ஆகியோருடைய புத்தி சொல்லும் வார்த்தைகளினால் நடந்தது. [6]"வசனத்தின்படியில்லாமல் ஒழுங்கமைவு பெற்றிருப்பதைக் காட்டிலும், வசனத்தின்படியாக ஒழுங்கமைவு இல்லாமல் இருப்பது மேல்'' என்ற பழமொழியானது - முன்னோடிகளை உருவாக்கி வளர்க்காததற்கு ஒரு சாக்குப் போக்காகக் கூறப்படாத வரையில் - மிகவும் மதிப்புள்ளதாகும். [7]தீத்து 2:2, 3ல் presbyter என்ற வார்த்தையின் பெயர் உரிச் சொல் வடிவமொன்று பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வார்த்தை NASB யில் "older" என்றும், KJV யில் "aged" என்றும், தமிழில் "முதிர் வயதுள்ள'' என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [8]அநேக நாமகரணக் கூட்டங்களில் ஒரு "pastor"ஐ ஏற்படுத்தும் அமைப்பானது வேதாகமத்தின்படியானது அல்ல. [9]இது சபையில் முன்னோடிப் பொறுப்பில் உள்ளவர்கள் அல்லது ஊழியக்காரர்கள் ஆகியவர்களில் எவரும் பின்பற்றக் கூடிய மிக உன்னதமான நடைமுறையாகும். [10]அவர்கள் முதலாவது உதவிக்காரர்களாகச் செயல்படவில்லை என்பதைக் கவனியுங்கள். உதவிக்காரராகச் செயல்படுவதென்பது மூப்பராவதற்கு அடிப்படைப் பயிற்சியென்று சிலர் தவறான கருத்துக் கொண்டுள்ளனர், இது உண்மையல்ல. மூப்பராயிருத்தல் மற்றும் உதவிக்காரராயிருத்தல் ஆகியவை இரண்டு தனித்தனி ஊழியங்கள் ஆகும். மாபெரும் உதவிக்காரராயிருக்கும் சில மனிதர்கள் ஒருபோதும் மாபெரும் மூப்பர்களாவதில்லை.

[11]"ஒரே மனைவியையுடைய புருஷனாயிருக்க வேண்டும்'' என்பது "முழு நிறைவான" ஒன்றாகும். [12]இந்த ஏழாவது பகுதியில் "ஏற்படுத்தப்பட வேண்டும்" என்ற சொற்றொடரை நான் அநேக முறைகள் பயன்படுத்துவேன். ஏனென்றால் தீத்து 1:5ல் ''ஏற்படுத்தி'' "appoint" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "ஏற்படுத்தி" என்ற நேரடி அர்த்தம் உடையதாய் இருக்கின்றது. அப். 14:23ல் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையில் இருந்து இது மாறுபட்டதாகும் (ஆனால் தமிழில் அப். 14:23 மற்றும் தீத்து 1:5 ஆகியவற்றில் ஒரே விதமான வார்த்தைதான் பயன்பட்டுள்ளது), ஆனால் ஒரே செயல்முறையைக் குறிக்கப் பயன்படுகின்றன. [13]KJVயில் மதவியல் சார்புப் பொருள் கொண்ட "ordained" என்ற வார்த்தையுள்ளது, ஆனால் மூலகிரேக்க மொழியில் இப்படியில்லை. "ஏற்படுத்தி" (Appointed - நியமித்தல்) என்பதே இன்றைய நாளுக்கான சிறந்த மொழிபெயர்ப்பாகும். [14]Dative case என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இலக்கணச் சொல்லானது "பிரதி செயப்படு பொருளை" வழக்கமாய் குறிப்பிடுகின்றது, இது ஒரு முன்னிடைச் சொல்லுடன் சேர்ந்து வரும். [15]அநேக உள்ளூர் சபைகளில் மற்றவர்களை விட அறிவிலும், பக்குவத்திலும் முதிர்வடைந்த மனிதர்கள் இருக்கின்றார்கள், சபையின் தேர்ந்தெடுப்பு செயல்பாடுகளில் இவர்கள் உதவி செய்வது தவறில்லை, ஆனால் அவர்கள் தங்கள் "சொந்த மனிதர்கள்'' தேர்ந்தெடுக்கப்படும்படியாக செயல் முறையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி விடக் கூடாது. மூப்பர்கள் உள்ள ஒரு உள்ளூர் சபையில் கூடுதலாக மூப்பர்கள் நியமிக்கப்படுகையில், ஏற்கனவே உள்ள மூப்பர்கள்தான் தேர்ந்தெடுக்கும் செயல்முறையை வழி நடத்திச் செல்லுகின்றார்கள். [16]"ஏற்படுத்தி'' என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையின் மூல வடிவமானது ''கைகளை நீட்டுதல்'' என்ற அர்த்தம் கொண்டிருந்தாலும், கைகளை உயர்த்தி வாக்களித்தல் என்று இது அர்த்தப்படுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. சபையார் யாவராலும் இவர்கள் அதிகமாய் விரும்பப்படுகிறார்களா என்பதல்ல, வசன ரீதியாக உள்ள தகுதியாம்சங்களை இவர்கள் அடைந்துள்ளார்களா என்பதே முக்கியமாகும். [17]பவுலும் சீலாவும் சபைகளை மறுபடியும் பார்வையிட்டார்கள் (15:40-16:6). [18]கலாத்தியாவில் இருந்த

சபைகளில் இரண்டு சபைகள் (அந்தியோகியா மற்றும் இக்கோனியா) பிசீதியாவில் இருந்தன. [19]பெர்கேயில் யாரேனும் கீழ்ப்படிந்திருந்தாலும், லூக்கா அதைப் பற்றி ஒன்றும் கூறவில்லை, பவுல் மறுபடியும் அங்கே திரும்பி வந்தார் என்று சுட்டிக்காட்டப் படவும் இல்லை. பவுலும் பர்னபாவும் கப்பலுக்காகக் காத்திருந்த போது நேரத்தைப் பயன்படுத்துவதற்காக அங்கு பிரசங்கித்தார்கள் என்றும், அப்பகுதியில் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளும் மக்களைக் கண்டதால் அல்ல வென்றும் சில விளக்கவுரையாளர்கள் நினைக்கின்றார்கள். அப்படியிருந்தால், அவர்கள் தாங்கள் செல்ல வேண்டிய இடத்திற்குப் போகும் கப்பலைக் காணாமல், அத்தாலியாவுக்குச் சென்று கப்பல் ஏறினார்கள் என்று ஆகின்றது (அதையே அவர்கள் செய்தார்கள்). [20]அந்தியோகியாவில் இருந்த சபையானது பவுலையும் பர்னபாவையும் ''கர்த்தருடைய கிருபைக்கு ஒப்புவித்தது.'' இது இவ்விரு மனிதர்களும் கலாத்தியாவில் இருந்த கிறிஸ்தவர்களை "அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு ஒப்புவித்த" செயல்பாட்டுக்கு ஏற்றதாகவே இருந்தது (14:23). இவ்விரு ஆசீர்வாதங்களுமே அவைகளைப் பெறுபவர்களைக் கர்த்தருடைய பராமரிப்பில் ஒப்புவிப்பதைக் குறிக்கின்றது.

[21]"தாங்கள் நிறைவேற்றின கிரியைக்காக" என்ற சொற்றொடரை நான் மிகவும் விரும்புகின்றேன். பவுலும் பர்னபாவும் ஒரு ஊழியத்தைச் செய்யச் சென்றார்கள், அதை நிறைவேற்றினார்கள்! [22]முதலாம் பயணம் எவ்வளவு காலம் நடந்தது என்பதைக் கணக்கிடுவது முடியாத செயலாய் இருக்கின்றது. நாள் கணக்கீட்டுப் பிரச்சனைகளுடன், பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவுக்குத் திரும்பி வந்து தங்கியிருந்த "அநேக நாட்கள்" என்பது எவ்வளவென்றும் நமக்குத் தெரியவில்லை (14:28). அது ஏறக்குறைய ஒரு ஆண்டு என்று கொண்டால், பயணமானது இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் நடந்திருக்க வேண்டும். அது இரண்டு ஆண்டுகள் என்று கொண்டால், பயணமானது ஒன்று அல்லது ஒன்றறை ஆண்டுகள் நடந்திருக்க வேண்டும். [23]''புறஜாதியாருக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்தார்'' என்ற சொற்றொடரானது, பாவியின் இருதயத்தில் "பரிசுத்த ஆவியானவரின் நேரடிக் கிரியை பற்றி" ஒன்றும் செய்வதற்கில்லை. [24]தேவன் தரும் வாய்ப்புகளை நாம் வெறுத்து ஒதுக்கும்போது, பெரும்பாலும் அவர் அந்த வாய்ப்புகளை நீக்கிப் போடுகின்றார் என்பதையே வேதாகமம் போதிக்கின்றது.